www.Padasalai.Net

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–06.**

ந.க.எண். 48834/டி1/இ4/2023, நாள். 06.05.2024

பொருள்: பள்ளிக் கல்வி – அரசு நிதி உதவிபெறும் பள்ளிகள் – 2023–24 ஆம் கல்வியாண்டிற்கான பணியாளர் நிர்ணயம் உபரி ஆசிரியர் பணிநிரவல் – தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் – அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை:
1. சென்னை – 600006, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 48834/டி1/ இ4/2023, நாள். 09.11.2023
2. சென்னை – 600006, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 48834/டி1/ இ4/2023, நாள். 09.02.2024

............

2023–24 ஆம் கல்வியாண்டில் அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளுக்கான பணியாளர் நிர்ணயம் தொடர்புடைய மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களால் நிர்ணயிக்கப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், உபரிப் பணியிடங்களில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் தொடர்ந்து அதே பணியிடங்களில் பணிபுரிய அனுமதிக்கப்படும் சூழலில் அரசுக்கு ஏற்படும் நிதியிழப்பினை தவிர்த்திடும் பொருட்டும், அரசுத் தணிக்கையில் உபரி ஆசிரியர்களை பணிநிரவல் செய்யாத காரணத்தினால் அரசுக்கு ஏற்படும் நிதியிழப்பினை சுட்டிக்காட்டி பல்வேறு தணிக்கைத் தடைகள் எழுப்பப்பட்டுள்ளமை, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் இப்பொருள் சார்ந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளமை ஆகியவற்றை கருத்திற் கொண்டு 2023–24 ஆம் கல்வியாண்டில் அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் அரசு மான்யத்தில் ஊதியம் பெற்று பணிபுரிந்து வரும் உபரி ஆசிரியர்களை பணிநிரவல் செய்வது சார்ந்து பார்வை 1ல் கண்டுள்ள செயல்முறைகளில் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அதனடிப்படையில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களால் கல்வி மேலாண்மை தகவல் முறைமையில் (EMIS) நிரப்பத் தகுந்த காலிப்பணியிடங்கள் மற்றும்

www.Padasalai.Net

பணிநிரவல் செய்யப்பட வேண்டிய ஆசிரியர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டது. மேலும் பார்வை (2)ல் கண்டுள்ள செயல்முறைகளில், கூட்டு மேலாண்மை பள்ளி நிர்வாகங்களின் கீழ் செயல்படும் உயர்/மேல்நிலைப் பள்ளிகளின் விவரங்களை உறுதி செய்து அறிக்கை அளித்திட தெரிவிக்கப்பட்டதுடன், சில கூட்டு மேலாண்மை நிர்வாகத்தினர் தங்கள் நிர்வாகத்தின் கீழ் நிரப்பத்தகுந்த காலிப்பணியிடங்கள் இருந்தும் உபரி ஆசிரியர்கள் பணி நிரவல் செய்யத் தவறியமையினை சுட்டிக்காட்டி தொடர்புடைய நிர்வாகங்களுக்கு எழுத்துப் பூர்வமாக தகவல் தெரிவித்து 14.02.2024க்குள் பணிநிரவல் ஆணைகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், சிறுபான்மை பள்ளிகளில் தற்போது உபரியாக பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் பணி நிரவல் மூலம் ஈர்த்துக் கொள்வது சார்ந்து தொடர்புடைய பள்ளி நிர்வாகங்களுடன் கலந்தாலோசனை செய்து தொடர்புடைய பள்ளி நிர்வாகங்களின் இசைவின் அடைப்படையில் 16.02.2024க்குள் பணி நிரவல் ஆணை வழங்கி EMISல் பதிவு செய்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தது.

தற்போது 2023-24 கல்வியாண்டு நிறைவடையவுள்ள நிலையில், 31.05.2024ல் பணி ஓய்வு பெறும் ஆசிரியர்களைக் கருத்திற்கொண்டு 31.05.2024 நிலவரப்படியான காலிப்பணியிட விவரங்களையும், உபரி ஆசிரியர்கள் விவரங்களையும் சரிபார்த்து இறுதி செய்து EMISல் பதிவேற்றம் செய்வதுடன் உரிய விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் பூர்த்தி செய்து 10.05.2024க்குள் அனுப்பி வைத்திட தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு மேலாண்மை நிர்வாகத்திற்குள் பணி நிரவல் நடவடிக்கை மற்றும் சிறுபான்மைப் பள்ளி நிர்வாகத்தின் இசைவின் அடிப்படையில் பணி நிரவல் நடவடிக்கைகளையும் 15.05.2024க்குள் நிறைவு செய்திட தெரிவிக்கப்படுகிறது.

2023-24ம் கல்வியாண்டிற்கான பணி நிரவல் நடவடிக்கைகள் எதிர்வரும் மே 2024ம் மாதத்தின் இறுதி வாரம் முதல் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக

www.Padasalai.Net

சிறுபான்மையற்ற பள்ளிகளில் (Non-minority schools) பணிபுரிந்து வரும் உபரி ஆசிரியர்களுக்கான பணிநிரவல் கலந்தாய்வு எதிர்வரும் 30.05.2024 மு.ப., கல்வி மாவட்ட அளவிலும், 30.05.2024 பி.ப., வருவாய் மாவட்ட அளவிலும் நடைபெறும். இவ்விரு கலந்தாய்வுகளும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் நடத்தப்பட வேண்டும். இப்பொருள் சார்ந்து கலந்தாய்வு நடைபெறும் இடம், நாள் ஆகியவற்றினைக் குறிப்பிட்டு தொடர்புடைய உபரி ஆசிரியர்கள் மற்றும் பள்ளி நிர்வாகங்களுக்கு எழுத்துப்பூர்வமாக தகவல் தெரிவித்திடவும், கலந்தாய்விற்கு உரிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு: படிவங்கள்

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்:
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.